
லயன்
காமிக்ஸ்
ஒரு திகில் பயணம்!
ரூ.3.50

# வாசகர் கடிதம்!

- **T. V. ஆனந்தராஜ், ராஜபாளையம்**



| | | | |
|---|---|---|---|
| 100 வது இதழ் | - | மே | 1994 |
| 125 வது இதழ் | - | ஜூன் | 1996 |
| 150 வது இதழ் | - | ஜூலை | 1998 |
| 175 வது இதழ் | - | ஆகஸ்ட் | 2000 |
| 200 வது இதழ் | - | செப்டம்பர் | 2002 |

இவை அத்தனையும் சிறப்பாக வர என் அட்வான்ஸ் வாழ்த்துக்கள்!

- **பாரதி நந்தீஸ்வரன், குமாரபாளையம்**

அரசியல்வாதியின் 'தில்லுமுல்லு' முறியடிப்பு பற்றிய சுவையான கதை **''பிணம் காத்த புதையல்''.**

- **P. நாகராஜ், C. பாளையம் (P.O.) தாராபுரம்.**

**'ஸ்பைடர் குள்ளன்'** என்றொரு ஹீரோ இருந்தானே - மறந்து விட்டீர்களா?

- **M.ஆனந்த், சென்னை - 83.**

| | | |
|---|---|---|
| என்னைப் பெற்றெடுத்த | **''அம்மா''** | - மூன்றெழுத்து |
| அவர்கள் எனக்கு ஊட்டிய | **''அன்பு''** | - மூன்றெழுத்து |
| நான் கற்றுக் கொண்டிருக்கிற | **''கல்வி''** | - மூன்றெழுத்து |
| அதைக் கொண்டு பொழுதுபோக்குகின்ற காமிக்ஸ் | **''லயன்''** | - மூன்றெழுத்து |
| லயன் பெறுகின்ற | **''வெற்றி''** | - மூன்றெழுத்து |
| நான் உங்களுக்கு கூறும் | **''நன்றி''** | - மூன்றெழுத்து |




லயன் ரசிகர்களே,

ஒரு படம் ரிலீஸான முதல் வாரத்திலேயே குறிப்பிட்ட சில செண்டர்களின் வசூலை வைத்து படம் 'ஹிட்'டா - இல்லையா என்பதை சொல்லி விடலாம் என்பார்கள்! அதே போல் -

முதல் வாரத்து விற்பனையையும் உங்கள் கடிதக் கணைகளின் வேகத்தினையும் கொண்டே நமது செஞ்சுவரி ஸ்பெஷல் சூப்பர் ஹிட்டாகி விட்டது என்பதை புரிந்து கொண்டோம்! பத்து நாட்களுக்குள் reprint செய்ய வேண்டிய கட்டாயம் - அப்படியும் ஏகப்பட்ட ஊர்களுக்கு தேவைக்குக் குறைவாகவே பிரதிகள் அனுப்ப முடிந்தது!

இதழ் தயாரிப்பில் ஏற்பட்ட சிரமங்கள் அத்தனையும் - விற்பனை பரபரப்பில், உங்கள் விமர்சனக் கடிதங்களில் மறந்தே போய் விட்டது!

இந்த வெற்றிக்கு உறுதுணை நின்ற விற்பனையாள - வாசக நண்பர்கள் அனைவருக்கும் எங்களது sincere thanks!

'செஞ்சுவரி ஸ்பெஷலில்' வந்த கதைகளுள் வாசகர்களைக் கவர்ந்த நம்பர் ஒன்.. கதை டெக்ஸ் வில்லரின் சாகஸம்தான் என்பதை உங்கள் கடிதங்கள் மூலம் தெளிவாகப் புரிந்து கொண்டேன்! அடுத்த இடத்தில் மாடஸ்டி பிளைஸியின் இரத்தச்சிலை! நீண்ட நாட்கள் கழித்து வந்துள்ள மாடஸ்டிக்கு ஆரவாரமான வரவேற்பு கிடைப்பது பற்றி மிக மிக சந்தோஷம்! (தனக்குப் பெண் குழந்தை பிறந்தால் ''பிளைஸி'' என்று தான் பெயரிடுவேன் என்று எழுதியுள்ளார் குமாரபாளையம் வாசகரான பாரதி நந்தீஸ்வரன்! இது எப்படி - யிருக்கு?)

ஆர்ச்சிக்கும், ஜானிக்கும் தங்கள் திறமைகளைக் காட்ட அதிகப் பக்கங்கள் ஒதுக்கப்பட வில்லையே என்பதில் அநேக வாசகர்களுக்குப் பொறுமல்! அடுத்து வரும் இதழ்களில் இவர்களுக்கு கூடுதல் சான்ஸ் தர முயற்சி செய்கிறேன்!

ஸ்பைடரின் கதைக்கும் பக்கங்கள் கூட்டியிருக்கலாமே என்று பாதி வாசகர்கள் அபிப்ரா யப்பட்டுள்ளனர்; மீதிப் பேர் ''இதுவே ஜாஸ்தி - ஸ்பைடர் கதைகள் காதில் பூச்சுற்றும் விவகாரம்'' என்று எழுதியுள்ளனர்! லக்கி லூக் கதைகளை கட்டாயம் முழு வண்ணத்தில் தான் வெளியிட வேண்டுமென்று ஏகோபித்த கட்டளைகள்! ரிப்கிர்பி & ஜேம்ஸ் பாண்ட் கதைகளின் சித்திரங்களைப் பாராட்டி பல கடிதங்கள்!

இது தவிர, க்ரைம் க்விஸ், தொடரும் நினைவுகள், Top 10 ஹீரோக்களை வரிசைப் படுத்தும் போட்டி - என்று பல்வேறு பகுதிகளுக்கு எக்கச்சக்கமான கார்டுகள் வந்துள்ளன! இன்னமும் கடிதங்கள் வந்து கொண்டே இருப்பதால் ''தொடரும் நினைவுகள்'', Top 10 கதைகள் / ஹீரோக்களை வரிசைப்படுத்தும் போட்டி''க்கான முடிவுகளை அடுத்த இதழில் தான் வெளியிடயிருக்கிறோம்!

வாசகர்களின் படைப்புகளுக்கென பக்கம் ஒதுக்கப்படும் என்று எழுதியிருந்தேன் அல்லவா? திருவண்ணாமலை வாசகரான S. ஜெய்ஷங்கர் மிக மிக வித்தியாசமான; அருமையானதொரு படைப்பை அனுப்பியுள்ளார். பக்கம் 72, 73, 74 ல் இவரது கைவண்ணத்தில் உருவான கார்டூனைப் பார்க்கலாம்! ஆர்வத்துடன் இந்த நண்பர் காட்டியுள்ள வழியில் மற்ற வாசகர்களும் தங்களிடமுள்ள Creativity ஐ அவிழ்த்து விடுவார்களென எதிர்பார்க்கிறேன்!





அடுத்த மாதம் நமது லயனின் 10வது ஆண்டு மலர் வரயிருக்கிறது! முன்னர் அறிவித்தது போல அல்லாமல் ''மந்திர மண்ணில் மாடஸ்டி'' எனும் அட்டகாசமான மாடஸ்டி சாகஸம் ஆண்டு மலரில் வரயிருக்கிறது! பத்து வருடங்களுக்கு முன் ''கத்தி முனையில் மாடஸ்டி''யோடு ஆரம்பித்த நமது காமிக்ஸ் பயணத்தில் - முக்கியமானதொரு மைல்கல்லான 10வது ஆண்டு மலரை மாடஸ்டியே அலங்கரித்தால் சிறப்பாக இருக்குமென நினைத்தேன்!

ஆகஸ்ட் மாதம் காட்டிலாகா அதிகாரியான பீட்டர் பாலண்டைனின் ''நடுக்கடல் நரகம்'' எனும் சித்திரக்கதை வருகிறது! இந்த இதழுக்காக நாங்கள் தயாரித்துள்ள அட்டைப் படம் நிச்சயம் உங்களை அசத்தப் போகிறது பாருங்கள்!





அப்புறம் - ஆகஸ்ட் மாதத்தில் உங்களுக்கு ஒரு போனஸ் காத்திருக்கிறது! காமெடி கௌ-பாய் லக்கி லூக் இனி தொடர்ந்து நமது லயன் காமிக்ஸில் வலம் வருவார் என்று எழுதியிருந்தேன் அல்லவா? அவரது முழுநீள = முழு வண்ண சாகஸமான ''ஜெஸ்ஸி ஜேம்ஸ்'' ரூ. 6/- விலையில் ஆகஸ்ட் 15ம் தேதி வரயிருக்கிறது! அடிக்கடி இது போல லக்கியின் காமெடி ஸ்பெஷல்கள் தொடரும்!





இன்னொரு அதிரடி நியூஸ்! 1986ல் நமது திகில் காமிக்ஸில் துவங்கிய ஏஜண்ட் XIII ன் இரத்தப் படலம் கதைகளை நீங்கள் நிச்சயம் படித்திருப்பீர்களென நினைக்கிறேன்! இரத்தப் படலம் - பாகம் IV வரை வந்துள்ளது! அதன் தொடர்ச்சி கூடிய சீக்கிரத்தில் நமது லயனில் வரயிருக்கிறது! (இரத்தப் படலம் - X வரை தயாராகி விட்டது)

உலகின் தலைசிறந்த படைப்பாளர்களின் கதைகளை தொடர்ந்து கொண்டு வந்து, வரயிருக்கும் மாதங்களில் உங்களைத் திக்குமுக்காடச் செய்யப் போகிறோம்! தயாராக இருங்கள்!

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்! அதுவரை - happy reading!

அன்புடன்,

எஸ். விஜயன்

ஆசிரியர்.

# மாதம் ஒரு வாசகர்



| | | | |
|---|---|---|---|
| வாசகர் பெயர் | : | ஜெ. நிமல்ராஜ் | வயது :16 |
| முகவரி | : | 65 1/1, Yenrooyan Stop,<br>Col - 13, Shri Lanka | |
| கல்வித் தகுதி | : | G.C.E. [A/L] | |
| பொழுது போக்குகள் | : | பழைய நாணயச் சேகரிப்பு, பேனா நட்பு, புத்தகங்கள் | |
| லயன் காமிக்ஸ் படிப்பது எத்தனை காலமாய்? | : | 10 வயது முதல்... | |
| லயன் காமிக்ஸ் அறிமுகமானது எப்படி? | : | ஒரு நண்பி மூலமாக | |
| நீங்கள் படிக்கும் இதர பத்திரிக்கைகள் என்ன? | : | முத்தாரம், சூப்பர் நியூஸ்<br>கல்கண்டு, தினமுரசு | |
| இதுவரை வந்த லயன் காமிக்ஸ் கதைகளில் நீங்கள் மிகவும் ரசித்துப் படித்தது எந்தக் கதை? | : | தலைவாங்கிக் குரங்கு | |
| உங்களைத் தவிர வேறு யாரும் வீட்டில் லயன் காமிக்ஸ் படிக்கிறார்களா? | : | ஆம். (அக்கா, தம்பி) | |
| படித்து முடித்த பின் இதழை என்ன செய்வீர்கள்? | : | சேர்த்து வைத்திருக்கிறேன். | |

லயன் காமிக்ஸ்

கேப்டன் பிரின்ஸ் குழுவினரின்-

# ஒரு திகில் பயணம்!






ஆப்பிரிக்க கடற்கரையோரம்... புதிய குடியரசு நாடான லோகான்காவின் தலைநகரமும் பிரதான துறைமுக முமான லாம்பாஸியில் மழைக்காலம் தொடங்கிய சில தினங்களுக்குப் பின்...
ஹாய்ய்... மார்க்கட்! இந்த ஊருக்கு வந்த ஞாபகார்த்தமா ஏதாவது வாங்கப் போறேன்!
போற ஊர்லேயெல்லாம் எதை யாவது வாங்கி 'கழுகு' முழுக்க அடைச்சு வச்சிருக்கே. இப்படியே போனு சரக்கு ஏத்த இடமே இல்லாம போயிடும் போலிருக்கு!


காப்டன் இதைப் பாருங்க... - படு அட்டகாசமாக இருக்கு இல்லே? அப் படியே படிச்சிட முடியற மாதிரி உணர்ச்சிகள் என்னமா வெளிப்படுது பாருங்க!
உனககு புடிச்சா சரிதான்... வாங்கிக்கோ!
உங்களுக்கு கொஞ்சம்கூட ரசனையே கிடையாது... காப்டன்!
இருக்கலாம்...! நேரமாச்சு - கிளம்பு!
'ஸ்டார் டஸ்ட்' ங்கிற மதுபானக் கடையிலே நம்மோட புது வாடிக்கை யாளரை சந்திக்கிறதா ஏற்பாடு!
இந்த இடம்தான்... யாரோ உல்லா சமா சீட்டியடிச்சுக்கிட்டு வெளியே வர்ற மாதிரி இருக்கு!


மறுகணம்-
!!?
பார்னே.. நீயா? கால் தடுக்கிட்டதா என்ன?
பன்றிப் பயல்கள்! எழுந்திரிச்சி அவனுகளை இப்போ என்ன பண்றேன் பாரு...
அப்படியே ஓடிப் போயிடு... மறுபடியும் உன் தலை இந்தப் பக்கம் தெரிஞ்சுதோ.. உனக்கு நல்லதில்லை!


லாம்பாஸியில் இன்னமும் நிர்வாகம் சீராக செயல்படலை... குறிப்பாக வெளிநாட்டு ஆசாமிகளை உள்ளே விடறதிலே அங்கே இங்கே சில தப்பு நடந்திடுது... சரி.. இங்கே வேலை செய்ய லைசென்ஸ் வச்சிருக்கியா?
நீ யாரு அதை கேட்கிறதுக்கு?
நீ யார்..? லோகான்காவுக்கு புதுசா...? வெளிநாடா?
வழிப்போக்கன் - அவ்வளவுதான்!
உள்ளே எனக்கு வேலை இருக்கு... கொஞ்சம் ஒதுங்கி வழி விடறீங்களா...?
அப்படியா?
என் பேரு ப்ரோஜன்... ஏற்றுமதி-இறக்குமதி... லாம்பாஸியிலே எனக்கு தெரியாதவங்களே கிடையாது... யாரை நீ சந்திக்கணும்னு சொல்லு... ஏற்பாடு பண்றேன்!
அவசியமில்லை... நானே போய் பார்த்துக்கிறேன்!



இப்போது ஒதுங்கி நீங்களா வழி விடறீங்களா... இல்லை நானே உண்டாக்கிக் கொள்ளவா?
ஓகோ!
திமிர் பிடித்தவனே... உன்னை
இங்கே இதுதான் வழக்கமா...
இல்லே... சம்பிரதாயமே இப்படித் தானு! ஓ.கே.. நானும் அதே வழி முறையிலே போறேன்..
கும்
காப்டன் ஜாக்கிரதை!
!
நல்லாயிருக்கு நீங்க இங்கே வெளிநாட்டவர்களை வரவேற்கிற லட்சணம்... தூ -
பாஸ்... இந்த பரட்டையன் உங்களை அடிச்சானு என்ன?
நீ குறுக்கிடாதே பலோஸ்!


பயலோட பலத்தை இப்போ எடை போட்டுப் பார்த்திடுவோம்
மரியாதையா சொல்றேன் - கையை எடு...
எங்க காப்டனை தொடாதே!
ஜின்... நீ விலகிப் போயிடு!
அப்படியே நில்லுடா...
பாஸ்.. அவனை என்கிட்டே விடுங்க!
கேட்க நாதியில்லைன்னு நெனைச்சியாடா...
பட்!


அப்படியே ஓடிப்போயிடுங்க.. நீங்க அவசரமா வெளியிலே போக வேண்டிய நெருக்கடி ஏற்பட்டுப் போச்சுன்னு உங்கள் பாஸ் கிட்டே சொல்லிடறோம்... புரிஞ்சுக்குவார்!... ஹா... ஹா...ஹா
கும்!
ஏன் இன்னமும் நிற்கிறே... நான் கொடுத்தது போதாதா?
ஸாரிப்பா... உன்னோட பலத்தை குறைச்சலா மதிப்பீடு பண்ணி விட்டேன்... உன்னை மாதிரி ஆட்கள் இங்கே இல்லாமத்தான்...
நைச்சியமா பேசறான்...! இவன் ஒரு நச்சுப் பாம்பு!.. ஏதாவது வேலை கொடுக்கிறேன்னு சொன்னான்னா ஒப்புக்காதே!
ஏய்... நீ இன்னும் போகலை?
அந்த எச்சரிக்கைக்கு அவசியமே இல்லை! ஏன்னா - ஏற்கனவே ஒரு ஒப்பந்தம் இருக்கு - டைகோ பர்மாங்கிறவரோடு!
!!
பர்மாங்கிறது முதல் பெயர் மிஸ்டர் பிரின்ஸ்! நான்தான் நீங்கள் குறிப் பிட்ட நபர் - மிஸஸ் டைகோ!



உங்களை பார்க்கிறப்போ என்னோட பர்சனலிட்டியில் நான் இன்னும் கொஞ்சம் அக்கறை காட்டியிருக் கலாம்னு தோணுது!
எனக்கு எப்போதுமே 'சிக்' கென்றிருக்க வேண்டும்!
நம்மிடையே நடந்த கடிதப் போக்கு வரத்து உங்களுக்கு விஷயத்தை தெளிவாக சொல்லியிருக்கும்னு நினைக்கிறேன். அதாவது- உங்களுடைய படகு ஆற்றினுள் வெகு தொலைவு போய் அங்கே தயாராக இருக்கும் சரக்கை ஏற்றிக் கொண்டு மீண்டும் கடலுக்குத் திரும்பி மரோக் நோக்கிப் பயணமாகணும்
ஆனால் சரக்கு இன்னதென்று இன்ன மும் சொல்லப்படலை! லிப்ஸ்டிக்..? பெளடர் டப்பா..? - இல்லேன்ன... வெடி மருந்து? உங்க்ளை பார்த்த பிறகு எனக்குள்ளே எழுந்த கேள்வி இது!
ரொம்ப தமாஷா பேசுறீங்க!
சரக்கு இருக்கும் பெட்டிகள் முதலில் விமானம் மூலம் ஏற்றி அனுப்பப் பட்டன... லோகான்கா கானகப் பகுதிக்கு மேலே வந்து கொண்டி ருக்கும் போது விமானம் வெடித்து தரையிறங்கி விட்டதாம் சரக்கை மீட்டு வர ஆள் தேடினார்கள்... நான் ஒப்புக் கொண்டிருக்கிறேன்!


ப்ரோன்ஜனுக்கு இதில் வருத்தம் போலிருக்கு!
கிடக்கிறான் - விடுங்கள்!
அவனால் இடைஞ்சல் வரலாம்...! சரி - அங்கே சரக்கை கழுகில் ஏற்ற கூலி யாட்கள் கிடைப்பார்களா?
காத்துக் கிடக்கிற விமானியை தவிர அங்கே யாரும் கிடையாது!
சரி... அங்கே போய் பார்த்துக்குவோம்!
இன்னொரு வாட்டி சொல்லு... - ப்ரோன்ஜனுக்கு கிடைக்காமல் கை நழுவிப் போன காண்ட்ராக்ட் வேலையா இது? கேட்க எவ்ளோ சந் தோஷமா இருக்கு தெரியுமா?


பார்னேயின் கவனம் முழுக்க அந்தப் பக்கமா இருக்கு... ரொம்ப சுலபமா சுட்டு வீழ்த்திடலாம்... பாஸ்!
சும்மா சும்மா துப்பாக்கியை ஆட்டிக் கிட்டு சவடால் பேசாதே..! நிம்மதி யாக சிந்திக்கவிடு... என்னை! சங்கதி ரொம்ப சுவாரஸ்யமா போயிட்டிருக்கு!


குடிச்சி மாசக் கணக்கிலே ஆச்சு..! இப்போ கொஞ்சம் ஏத்திக்கிட் டேன்னா வேகம் வந்திடும்.
அப்படி ஒண்ணும் நீ காய்ஞ்சி கிடந்த மாதிரி தெரியலியே பார்னே... பாரல் பாரலா நீ குடிச்சிட்டு கும்மாளம் போட்ட தமாஷை இந்த ஊர் முழுக்க வேடிக்கை பார்த்ததே!



புறப்பட தடபுடலா ஏற்பாடு நடந்துக் கிட்டிருக்கு!
எட்டு மணிக்கு கிளம்பறதா தகவல்!
இப்பவும் ஒண்ணும் குடி முழுகிப் போயிடலை.... லெப்டினெண்ட் புலாவுக்கு போன் பண்ணினா போறும்... செக்யூரிட்டி சோதனைன்னு அவங்களை அடுத்த இருபத்தி நாலு மணி நேரத்துக்கு இங்கேயே முடக்கிப் போட்டிடுவார்!
உனக்கு ஏன்தான் புத்தி இப்படிப் போகுதோ? ஒண்ணு சொல்றேன் - தெரிஞ்சுக்கோ..! அவங்க வழியிலே இப்போ நாம குறுக்கிடறதா இல்லை!
இரகசியமா பின் தொடர்ந்து போகலாம்னு தீர்மானிச்சிருக்கேன்!


பயணம் தொடங்கிவிட்டது -


புதரா மண்டிக் கெடக்கு... உள்ளாற சிங்கம், புலி எல்லாம் இருக்குமில்லையா?
காட்டுவாசிகள்கூட இருப்பாங்க!
நெஜமாத்தான் சொல்றியா..?
பின்னே.. பொய்யா சொல்றேன்?
அவங்களோட எல்லைக்குள்ளே முன் அனுமதி இல்லாம யார் நொழைஞ் சாலும் உடனே அவங்களுக்கு செய்தி எட்டிடும் - அவ்ளோதான்.. தொலைஞ்சோம்!
ஜனங்களோட நடமாட்டத்தை கட்டுப்படுத்த அதி காரிகள் இருப்பாங்கள்லே?
இருப்பாங்க.. ஆனு ரொம்ப தொலை விலே விலகி இருப்பாங்க. ஆப்ரிக்கா வின் இந்த மூலை ஒரு வகையிலே தென் அமெரிக்காவின் சில பகுதி மாதிரித்தான்!
இங்கே யார் வரப்போறா.. தங்கம் கெடைக்குமான்னு ஆசைப்பட்டுக் கிட்டு ஒன்று ரெண்டு பேர் வரலாம்... இல்லேன்னு நம்மை மாதிரி வந்து மாட்டிக்கிட்டாத்தான் உண்டு!
காட்டு வாசிகள்ன ஆளை அடிச்சு சாப்பிடுவாங்களோ?


காட்டுக்குள்ளாற போகாத வரை நமக்கு ஒண்ணும் ஆயிடாது! விமா னம் ஆத்தங்கரையிலேதான் விழுந்து கெடக்கிறதா அந்தக் குட்டி சொன்னா!
அப்படீன்னா காட்டு வாசிகள் கண்ணிலே படாமலேயே ஓடி வந்திடலாம் - இல்லையா?
கழுகு
உங்களை புரிஞ்சுக்கவே முடியலை..! லாம்பாஸிக்கு எதுக்காக வந்தீங்க நீங்க?
இப்படியெல்லாம் விசாரணை பண்ணினீங்கன்னா உங்களுக்கு யாருமே வேலை கொடுக்க மாட்டாங்க காப்டன்!
ஹும்.. பழக்க தோஷம் - என்னோட பழைய தொழில் அப்படி! சரி... சரக்கு என்ன என்றாவது சொல்லலா மில்லையா?
பிரின்ஸ் ஒரு முன்னாள் 'இன்டர் போல்' ஆசாமி!
பெட்டிகளுக்கு சேதமில்லையாம்... சாமான்கள் பத்திரமா மார்க்கட்டுக்கு போய்ச் சேரணும்கிறதிலே...
...ஆப்பிரிக்க எக்ஸ்போர்ட்டருக்கு ரொம்ப அக்கறை!
!?


சரக்கு அற்பமானதா இருக்க முடியாது - ஏன்னா... ஆரம்பத்திலே விமானத்தை அமர்த்தி யிருக்கார்...
...இப்போ மீட்டு வர ஏகப்பட்ட பணம் செலவழிக்கிறார்!
எப்படி வேணும்னாலும் வச்சிக்கோங்க..!
ஆனா இதெல்லாம் உள் விவகாரம்... நீங்க மூக்கை நுழைக்க வேண்டாம்.. ஒப்பந்தப்படி சொன்னதை செஞ் சுட்டுப் போங்க... உதாரணமா இப்போ ஊர்ந்துக்கிட்டுப் போற படகின் வேகத்திலே நீங்க கவனம் செலுத்தினா போதும்..
அடேய் பிரின்ஸ் கண்ணா... இனிமேல் நீ வேலை செய்ய வேண்டியது இப்படித்தான்-


.. வாயை மூடிக்கிட்டு!
ஹூய்ய்...
திடீர்னு என்ன ஆச்சு பிரின்ஸுக்கு... இப்பிடி தலை தெறிக்கிற வேகத்திலே போறானே!
புரியுது... இந்த ராட்சஸிதான் ஏதாவது பேசியிருப்பா!
ஆமா.. பார்னே - எரிச்சலை யார் மேலே காட்டறதுன்னு தெரியலை. வேகத்திலே காட்டிட்டேன்!
இங்கே சரிதான்! ஒரு கிலோ மீட்டர் தள்ளி இப்படி பண்ணியிருந்தா ஆபத்தாய்ட்டிருக்கும்.. மணல் மேடுகளுக்கு இடையிலே கவனமா போக வேண்டிய இடம் அது!



பொடியா... காப்டனை உனக்கு ரொம்ப நாளா தெரியுமா?
பிரின்ஸையா? என்னோட குரு அவர்... எனக்கு விபரம் தெரிஞ்ச நாள்லேர்ந்து தெரியும் - ஏன் கேட்கிறீங்க?
அவர் கல்யாணமே பண்ணிக்கலியா...?
டேய்.. ஜின்.. இங்க வாயேன்!
அப்பாடா.. நெருக்கடியான நேரத்திலே வந்து கூப்பிட்டே- நன்றி பார்னே!
இதோ.. வந்துட்டேன்!
இப்படி முகப்பிலே உட்கார்ந்து மணல் குன்றுகளை கண்காணிச்சுக் கிட்டு வா...


வரை படத்திலே தெளிவா சொல்லி யிருக்கு... ஆனா நீரோட்டத்தில் அவை எப்போ இடம் மாறும்னு சொல்ல முடியாது!
புரியுது!
வேகம் கணிசமாக குறைந்து விட்டது... தடைகளினூடே நிதானமாக, சீராக முன்னேறிச் சென்று கொண்டிருந்தது 'கழுகு'...
..ஆனால் அது விட்டுச் சென்ற...
..தடம் முழுவதுமாக..
...மறைவதற்குள்...
மெதுவாக போ.. பலோஸ்!


இடைவெளி இப்படியே இருக்கட்டும்... பயணம் முடியும் மட்டும் அவர்கள் நம்மை பார்த்துவிடக் கூடாது!
அங்கே போய்ச் சேர்ந்த பிறகு வச்சுக்குவோம் நம்மோட கைவரிசையை!
இதுவரை பிரச்னை ஏதுமில்லை... ஆழம் போறாதோ என்று நீ பயந்த மாதிரி எதுவும் நடக்கவில்லை..
திரும்பி வரும்போ நிலவரமே வேறு..



சரக்கை ஏற்றிய பின் இந்த ஆழம் போதுமானதாக இருக்குமா... இல்லை - ஆற்றின் போக்கில் வேக மாகச் செல்லும் படகு எங்கேயாவது மாட்டிக் கொள்ளுமோ - நம் அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது!
அடுத்த திருப்பத்தில் படகை இடப் பக்க கரையோரமே விடு.. வலப் பக்கம் சுழல் ஒண்ணு இருக்கு...
காப்டன்.. பார்னே - ஓடியாங்கேளன்!
!?
ஏன்.. ஏன்டா இப்படி கூப்பாடு போடறே?
அதோ.. அங்கே பாரு!
நம்மை தாக்கப் போகின்றன..!
இந்த ஜந்துக்களா... ஹி..ஹி..ஹி! பதற்றமடையாதே பையா?


முதலைகளுக்கு படகின் எஞ்சின் இரைச்சல் கேட்டுக் கேட்டு பழகிப் போயிருக்கும்.. இப்போ பாரேன்!
டமார்
பாஸ் உங்களுக்கும் கேட்டதா...? சுடுகிறார்கள்...
அனுபவசாலியான பார்னே இந்த காரியத்தை பண்ணியதுதான் ஆச்சரி யமா இருக்கு.. ஆற்றோரம் இருக்கிற காட்டுவாசிகளை இந்தச் சப்தம் உசுப்பிவிட்டுவிடுமே!
இது - வேறொரு துப்பாக்கியோட முழக்கம்! அங்கே என்னதான் நடக்குது?
தொடர்ந்து கேட்குது...
டுமீல்!


பார்னே... உனக்கென்ன பைத்தி யமா... எதற்காக இந்த துப்பாக்கி முழக்கம்?
இரண்டாவதா கேட்டது நா ல்லை...! யாரோ கோமாளி துப்பாக்கியை முழக்கி யிருக்கிறான்!
கலவரமடைய வேண்டாம்!
அங்கே காத்துக் கிடக்கிற பைலட் டுக்கு துப்பாக்கியை இயக்கிறதுன்னா படு குஷின்னு உங்களுக்கு நான் சொல்லியிருக்கணும்!




வந்து சேர்ந்திட்டோம்னு தோணுது! அவன் ஏன் இம்மாம் பெரிய துப்பாக்கியை வச்சுக்கிட்டிருக்கான்?
பார்னே... அந்த துப்பாக்கியை என் கிட்டே கொடு!


எல்லாமே என் கட்டுக்குள் இருக்க வேண்டும் என்பது என் விருப்பம்... உன்கிட்டே துப்பாக்கி இருக்கிற சங்கதியை நீயே வெளிப்படுத்தியதற்கு நன்றி!


ஆனால்... பெண்ணே.. இங்கே இருக்கிற காட்டு வாசிகளைப் பத்தி எனக்கு நல்லா தெரியும்... திடீர்னு ஒரு நெருக்கடி ஏற்பட்டா...
இந்தப் பயணம் என் தலைமையின் கீழ் நடக்கிறது.. இங்கே எதையும் நானே தீர்மானிப்பேன்.. ஓ.கே.!



இந்தா..! காட்டு வாசிகள் எங்களை தாக்க வந்தா நாங்க உன் பின்னாலே ஒளிஞ்சுக்குவோம்... நீதான் ஒண்டியா நின்னு போராட வேண்டியிருக்கும்!
இதை வாங்கி இழுத்துக் கட்டு டெட்ரிச்!
சரியான சமயத்திலே வந்து சேர்ந் திட்டீங்க... இல்லேன்னா இங்கே இருக்கிற கடி எறும்புகள் என்னை தின்னு தீர்த்திருக்கும்!
ஏய்.. ஜின் - அங்கே என்ன வேடிக்கை.. வா... இறங்குவோம்!
எப்படி இருக்க முடியும்?


பார்னே நம்ம படகோட எஞ்சினை அணைச்சப்புறமும் ஒரு விநாடிக்கு, எதிரொலி மாதிரி மோட்டார் சத்தம் தொடர்ந்து கேட்டது சற்றுத் தொலைவிலே.. எப்படி?
ஜின்! நீ கேட்டது எதிரொலி அல்லதான்...
உடனடியாக அல்ல!
கரையில் நாம் அவர்களை மடக்குகிறோமா பாஸ்!
சரக்கை படகில் ஏற்றட்டும்.. நமக்காக அந்த சிரமத்தை அவர்களே செய்து முடிக்க அவகாசம் கொடுப்போம்!
அதுதான் சரக்கா...? ஏதோ பேன்ஸி அயிட்டங்கள்னு சொன்னாங்க!
பேன்ஸி அயிட்டமா..? நீயே போய் பார்த்துக்கோ...!


ஒப்பந்தம் இப்படிப்பட்டதுன்னு தெரிஞ்சி ருந்தா ஒரு தடவைக்கு இரண்டு தடவை படிச்சுப் பார்த்திருப்பேன்!
உன்னோட முதலாளியும் விமானத்தை ரெட்டிப்பு தொகைக்கு இன்ஷ்யூர் பண்ணியிருக்கக் கூடும்!
பதினொரு பெட்டிகளை ஏத்தியாச்சு... ராத்திரி பொழுதை இங்கேதான் நாம கழிக்கணும் போலிருக்கு!
உஸ்ஸ்... அப்பாடா! ஜின் - காப்பி ரெடியா?
ரெடி... காப்டன்!
மொள்ள ஊற்று! உன்கிட்டே ஒரு சங்கதி சொல்லணும் - யார் கிட்டேயும் நீ உளறிடமாட்டியே!
சொல்லுங்க காப்டன்!
ஏதோ அழகு சாதனப் பொருட்கள்னு சொன்னதெல்லாம் சரியான ஏமாற்று வேலை.. பெட்டியை நைஸா திறந்து உள்ளே என்னதான் இருக்குன்னு நீ நோட்டம் விடணும்!
பார்த்திடறேன்!



கொண்டு வந்திருக்கிறதை எடுத்து பகிர்ந்து கொடு ஜின்... சாப்பிட்டு விட்டு படுக்கையை போடுவோம்!
யாராவது காவல் நிற்கணும்!
அதற்கு நானுச்சு..! உங்களுக்காக நான் இங்கே காத்துக் கிடந்தப்போ பெருவாரியான நேரத்தை தூங்கியே கழிச்சேன்... நானிருக்கேன்... இந்த துப்பாக்கி இருக்கு - நீங்க நிம்மதியாக தூங்கலாம்!
எனக்கு ஏனோ சரியா படலை!
டுனா மீன் இருக்காக்கும்? இதைவிட ருசியா இங்கே வேறொண்ணு கெடைக்கும்.. போய் கொண்டாறேன் பார்!


இதோ.. ஏகப்பட்டது இருக்கு!
இந்த வகை செர்ரி பழங்களுக்குன்னே ஒரு தனி டேஸ்ட் உண்டு!
இது போறும்!
க்ராக
?
காட்டு வாசி! -கடவுளே!


அந்தக் குட்டி என்னோட துப்பாக்கியை புடிங்கிக்கிட்டா.. என்பாடு இப்போ திண்டாட்ட மாயிட்டுது!
என்னவோ வாரிக்கிட்டு வர்றேன்னு போனியாமே - இப்போ.. வெறுங்கையோட வர்றே?
வெறுங்கையா இருந்ததாலே திரும்பிட்டேன்.. இல்லேன்னா நடந்திருக்கிறதே வேற!
காட்டுவாசியா..? நீ பார்த்தியா?
நாம இங்கே வந்திருக்கிறது ஒரு காட்டுவாசிக்கு தெரிஞ்சுட்டுது - அடுத்து நம்ம கதி என்ன ஆகப்போகுதோ?
எனக்கு இது அசம்பாவிதமா தோணலை! உன் கையிலே துப்பாக்கி இல்லாம போனது நல்லதாப் போச்சு... இல்லேன்னா வழக்கமான பாணியிலே இறங்கியிருப்பே!


எதையும் சகிச்சுக்கிட்டுப் போறதுக்கு இது நேரமில்லேப்பா பிரின்ஸ்! அவன் போய் தன் கூட்டத்தார் கிட்டே நம்மைப் பத்தி சொல்வான் - அப்புறம்... நம் கதி?
காப்டன்! அந்த பெட்டிகளுக்குள்ளே.. இவங்க சொன்ன மாதிரி அலங்காரப் பொருள் ஏதுமில்லை... உள்ளே..
குட்டிச் சாத்தானே..! சின்னப் பையன் தானேன்னு உன்னை அலட்சியமா விட்டு வச்சது தப்பாயிட்டுதே!
உஷ்
மிஸஸ் டைகோ - அவனை விடு! நான் சொல்லித்தான் அவன் அக்காரியத்தைச் செய்தான் - உன் கோபத்தை என்னிடம் காட்டு!
நான் ஏற்கனவே சந்தேகப்பட்டது தான்!


இதெல்லாம் உங்களுக்கு அநாவசியம்! சொன்ன வேலையை செய்து முடித்துவிட்டு பணத்தை எண்ணி வாங்கி முடிஞ்சுக்கிட்டு போவீங்களா... அதை விட்டுட்டு-
நல்லாயிருக்கு! அடுத்து நாம என்ன செய்யப் போறோம்? இப்படியே நின்னுக்கிட்டிருந்தா செடி கொடிகள் நம்மைச் சுற்றி பார்த்து நம்மைப் போட்டு மூடிடப்போகுது
வந்த காரியம் எக்காரணம் கொண்டும் தோல்வியடைந்துவிடக் கூடாது என்பதில் நான் கறாராக இருக்கிறேன்... எனவே, உங்களால் மறுபடியும் இடையூறு முளைக்காமல் இருக்க ஜின் பிணையாக இருப்பான்.
அவனுடைய நலனில் உங்களுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பது இனிமேல் நீங்கள் நடந்து கொள்ளும் விதத்திலிருந்துதான் வெளிப்பட வேண்டும்!


டம்..டம்...டம்
என்ன... என்ன சப்தம் அது?
என்னவா..? - சொல்றேன்! இது காட்டுவாசிகளோட முரசு சப்தம்! நான் பார்த்த காட்டுவாசி போய் விஷயத்தை தன் கூட்டத்தார்கிட்டே சொல்லிட்டான் போலிருக்கு!
ஆனா.. இந்த முரசொலி கேட்கிற வரைக்கும் நாம பயப்பட வேண்டிய தில்லை! அது மௌனமான பிறகு தான் அவங்க எதிரிகளை வேட்டை யாட ஆரம்பிப்பாங்க!
பாஸ்.. உங்களுக்கும் கேட்குதில்லே?
டம்..டம்
நான் என்ன செவிடா - கேட்காம இருக்க? அது என்ன சப்தம் - அத னோட விளைவு எப்படியிருக்கும்னு யோசிச்சுக்கிட்டிருக்கேன்.


நம்ம 'நண்பர்கள்' தூங்கப் போற தீர் மானத்தை மாத்திக்கிட்டு பெட்டிகளை படகிலே ஏத்தற வேலையை துரிதப் படுத்துவாங்கன்னு நான் எதிர் பார்க்கிறேன்!
அதாவது சரக்கு ஏத்தி முடிக்க வெகு நேரம் ஆகாது... நாம செயல்பட வேண்டிய நேரம் நெருங்கிட்டுது என்கிறீங்க?
எல்லா பெட்டிகளையும் ஏத்தி முடிக்கி றவரை நாம காத்திருக்கப் போற தில்லை பலோஸ.
அவங்க சரக்கை ஏத்திக்கிட்டிருக் கிறச்சே வேலையிலே கவனமா இருப்பாங்க... அத்தோட -
...முரசொலி ஓயாதவரை ஆபத்து வராது என்று மெத்தனமா இருப் பாங்க.. அதான் தொடர்ந்து கேட்டுக் கிட்டிருக்கே!



பாதி சரக்கு அகப்பட்டால் கூட போதும் நமக்கு - பணக்காரர்களா யிடலாம்! வா... போய் கழுகை வசப்படுத்திக்குவோம்!
இங்கிருந்து குறி வைக்க ரொம்ப தோது! பிரின்ஸையும் அந்த பைலட்டையும் முதல்லே தீர்த்துக் கட்டிடணும்! நான் பிரின்ஸை குறி வைக்கிறேன்!
என் பிடரியிலே ஏன் இப்படி குறு குறுக்கிறது! - யாரோ என்னை உறுத்துப் பார்த்துக் கிட்டிருக்கிற மாதிரி!
பிரின்ஸ் நிற்கிறான்... இதுதான் சமயம் -
பாஸ்.. பொறுங்க - முரசு சப்தம் ஓய்ஞ்சிட்டுது!


சதக்!
ஐயோ... காட்டுவாசிகள்!
இவன் யார்.. குறுக்காலே?
காப்பாத்துங்க.. காப்பாத்துங்க!
பலோஸ்! இந்த சைத்தான் எப்படி திடீர்னு இங்கே முளைச்சான்?


ஜின்.. கேள்வி எதுவும் கேட்காமல் ஓரே ஓட்டமா ஓடு - படகை நோக்கி! நானும் சீக்கிரமே அங்கே வந்து சேர்றேன்.
ஓடுங்க விமானத்தை நோக்கி! உள்ளே போய் பதுங்கிக்குவோம்!
நூறு பேருக்கு குறையாது - நாம தொலைஞ்சோம்!
ஏய்.. இந்தாப்பா.. கையிலே மெஷின்-கன் இருக்கு என்கிற தைரியத்திலே ஆர்ப்பாட்டம் பண்ணாதே.. தாக்குப்படிக்க முடியாது.. நீயும் உள்ளே வந்திடு!
வர்றேன் - அப்புறமா?


அதற்குள் ஜின் படகை நோக்கி ஓடியிருந்தான்
ஆபத்திலே இருக்கிறோம்னு தெரிவிக்க வெடிக்கிற ராக்கெட் எங்கோ ஒரு மூலையிலே இருந்திச்சு... இப்போ அது உபயோகப்படலாம்!
ஆங்.. - கடவுளே!
நீங்க படகை கிளப்பிட்டுப் போக முயற்சி பண்றீங்களா - பிரின்ஸ், பார்னே மத்த எல்லோரையும் தவிக்க விட்டுட்டு?
சே.. கடைசி நேரத்திலே வந்து கழுத்தை அறுக்கிறியே
நங்கூரத்தை இன்னும் விலக்கியாகலே... இப்படியே கிளப்பினா மோட்டார் வெடிச்சுப் போயிடும்னு தெரியாதா?
என்னோட சரக்கை காட்டு வாசிகளுக்கு தத்தம் பண்ண மாட்டேன். அதை எப்படியாவது நான் கொண்டு போயிடணும் - மத்தவங்களைப் பற்றி எனக்கு அக்கறையில்லை!
நடக்காது!


நான் உடனே கிளம்பியாகணும்...
எப்படியாவது!
முரட்டுத்தனமாக விசை தள்ளப்பட்டதும் மோட்டார் உயிர்த்தெழுந்து ரீங்காரமிட்டதையடுத்து-
விர்ர்ரூம்
க்..ர..ரா..க்


மணல் குன்றில் போய் மோதி நல்லா மாட்டிக்கிட்டது - இப்போ திருப்திதானு?
பின்னோக்கி கொஞ்சம் போக முடிஞ்சா இந்த இக்கட்டிலிருந்து விடு பட்டு விலகி ஓடிப் போயிடலாம்!


அங்கே - விமானத்தில்...
சண்டாளர்கள்.. புற்றீசல் மாதிரி வந்துக்கிட்டே இருக்காங்களே!
ஒவ்வொருத்தனும் மூக்கு முட்ட தண் ணியடிச்சுட்டு நல்ல போதையிலே இருக்கிறான். கண்ணிலே வெறி கொப்பளிக்குது.


பிரின்ஸ்... ஒண்ணு ரெண்டு பேர் கழுகில் ஏறிட்டானுக... கழுகு மணலிலே எக்கச் சக்கமாக சிக்கி நிக்குது
ஜின்னும், மிஸஸ் டைகோவும் அங்கே இருக்காங்க... அவங்களை மீட்டாகணும்!
எப்படிப்பா...?
எனக்கு பாதுகாப்பு கொடு... பக்க வாட்டிலே நைஸா போயிடறேன்.
வாய்ப்பேயில்லை.. வீணா உயிரை போக்கிக்காதே!
நான் மட்டும் படகுக்கு போய் சேர்ந் திட்டேன்னு அப்புறம் இருக்கு வேடிக்கை - பொறுத்திருந்து பார்...
டுமீல்


ஐயோ ஐயோ!


சர்ர்!!
அபாய் கட்டத்தை தாண்டிட்டேன்..
இனி சாதிச்சிடலாம்!
யாயா
யார் மேலே... ஹலோ
- மிஸஸ் டைகோவா?


!
ஹேஏஏ...
போய்த்தொலை - சனியனே!
ஆட்டம் சூடுபிடிச்சுட்டுது!
இனி.. வாங்கடா..
பார்த்திடுவோம்!


க்ராாக்!
ஓவ்வ்...
பட்
பளார்!


டுமீல்!
ஹேய்ய்...
ரிவால்வர் தரையிலே கெடந்தது... அவன் உன்னை கொன்னுடுவா னேன்னு பயந்து...
நன்றி... யாரையும் கொல்ல வேண்டாம்னு நெனைச்சேன்... அவனவன் போதையிலே புத்தி தடுமாறி வெறியோட இருக்கான் - வேற வழியில்லைதான்!
அங்கே அகப்பட்டுக் கொண்டு தவிக் கிற பார்னேக்கும் மற்றவர்களுக்கும் உதவி செய்ய முயற்சிப்போம்!
இங்கிருந்தா...? எப்படி?
இதை வச்சு!
ஆபத்திலே இருக்கிறதை தெரிவிக்கிற சமிக்ஞை ராக்கெட்!நானும் இதையே தான் நெனைச்சேன்!


ஆனால் இது ஆபத்தில்லாததாச்சே!
ஆனாலும் நான் எதிர்பார்க்கும் விளைவை நிச்சயம் ஏற்படுத்தும்!
அங்கே -
தோட்டா கையிருப்பு தீரப் போகிறது!
என்கிட்டேயும் தான்!
முடிந்தவரை தூர எறிய வேண்டும்... இதை!
ஊப்ப்..
டமார்
கண்ணை மூடிக்கிட்டு பதுங்கிக் கோங்க!
டமீல்




நிச்சயம் இது பிரின்ஸோட வேலை யாத்தான் இருக்கும். நெருக்கடியை சமாளிக்கிற சாமர்த்தியம் இங்கே வேற யார் கிட்டேயும் கிடையாது!
பலிச்சுட்டது! கல்லடிபட்ட நாய் மாதிரி அத்தனை காட்டு வாசிகளும் எங்கோ ஓடிப் போயிட்டானுக!
வெறியோட சண்டைபோட நல்லா போதை ஏத்திக்கிட்டு வந்தவங்க ளுக்கு புத்தி நிதானத்திலே இல்லாத தாலே என்னவோ ஏதோ என்று கல வரமடைந்து உயிர்பிழைச்சா போதும்னு ஓடிட்டாங்க!


நெனைச்சதை சாதிக்கணும்... அதுக்கு யாரையும் பலி கொடுக்கத் தயங்காத கிராதகி நீ.. நெருக்கடி வந்தப்போ மத்தவங்களைப்பத்தி அலட்டிக்காம தப்பியோட நெனைச்ச ஈனப்பிறவி நீ.. பெருந்தன்மையா தோல்வியை ஏத்துக்கிடுவேன்னு நெனைக்கிறேன்.
இப்போது முதல் நீ,எங்கள் கைதி...! ஜின் - இத்தனை பேருடைய உயிரை பணயம் வைக்கிற அளவுக்கு அந்த பெட்டிகள்லே அப்படி என்ன சரக்குத் தான் இருக்கு?
உங்களாலே யூகிக்கவே முடியாது காப்டன்!.. அது...
ஹலோ.. 'கழுகு'! இதோ - உதவிக்கு நாங்கள் வந்திருக்கிறோம்.
!?
அடடே... ஏதோ 'அட்வன்ச்சர்' படத்திலே வர்ற மாதிரில்லே நடக்குது எல்லாம்..!


... வாடிக்கையா எப்போதுமே வர்ற மாதிரி 'கிளைமாக்ஸ்' நடந்து முடிஞ்சப்புறம் பத்து நிமிஷம் கழிச்சு வந்து சேர்ந்திருக்குது போலீஸ் அணி!
நீங்கதான் பிரின்ஸா? கரைக்கு வாங்க - பேசுவோம்!


ஓகோ... நீங்களும் உங்கள் பங்குக்கு ஒரு பெரிய மீனை பிடிச்சாந் திருக்கீங்களா!
ப்ரோன்ஜனைத்தானே? காட்டுவாசிகள் துரத்தி வர தப்பிச்சா போதும்னு தன்னோட படகை நோக்கி நீந்தப் போயிக்கிட்டிருந்தப்போ புடிச்சோம்... இந்த விவகாரத்திலே அவனோட பங்கு என்னன்னு நீங்கதான் சொல்லணும்... பயல் வாயை திறக்க மாட்டேன்கிறான்!


எங்களைக் கொண்டு மிஸஸ் டைகோ மீட்க நெனைச்ச விவகாரமான சரக்கை கைப்பற்றிக் கிட்டு போகலாம் கிற திட்டத்தோட வந்திருக்கணும்.. ஆனு நெலவரம் பாதகமா திரும்பிட்டுது...
இவனேட செக்ரட்டரி பலோஸ் உன்னை தீர்த்துக் கட்ட நினைத்து அந்த சூழ்ச்சிக்கு தானே பலியாகிட்டான்.
விமானம்...
ப்ரோன்ஜனும், பலோஸும் கொஞ்ச காலமா வெளியே தலை காட்டாம பதுங்கியே கிடந்தானுக... விமானம் விபத்துக்குள்ளாகிய சேதி பயல்களுக்கு மீண்டும் ஆசையை தூண்டி விட்டது போலும்.
உள்ளே சலசலப்பே இல்லியே... பார்னே?
கலவரமடையாதேப்பா..! இதோ வந்திட்டேன்!
?


நம்மை விட்டா இங்கே இவனொருத் தன்தான் யோக்கியன் போலிருக்கு.. ஆனாலும் பயலுக்கு திடம் போறாது...
அப்படி அந்த பெட்டிகள்லே என்ன தான் இருக்கு?
அடிப்படை வைரங்கள்...! போன மாசம் தென் ஆப்ரிக்க சுரங்கம் ஒன்றி லிருந்து மூன்று வாகனிலிருந்த வைரப் படிகங்கள் திருடு போன தற்கும் இதற்கும் நிச்சயம் தொடர்பு இருக்கும்னு தோணுது!
இம்மாதிரி திருட்டு நடைபெறுவது அபூர்வம்கிறதினாலே சுரங்க கம்பெனி யினர் மெத்தனமாக இருந்திருக் கிறாங்க... ஆனா திருடு போன வைரங்கள் எப்படி மாயமா மறைஞ்சிட்டுது என்கிற ஆச்சரியத்திலே போலீஸ் திணறிக் கிட்டிருந்தது...




பிரகாஷ் பப்ளிஷர்ஸ் சார்பாக லயன் காமிக்ஸ் மாத இதழை அச்சிடுபவரும் வெளியிடுபவரும், ஆசிரியரும் - S. விஜயன். முகவரி : பிரகாஷ் பப்ளிஷர்ஸ், தபால் பெட்டி எண் : 374, சிவகாசி - 626 123. போன் : 20649.
அச்சிட்டோர் : தி விஜய் புக்ஸ், சிவகாசி - 626 123.
வெளியீடு எண் : 101.


சிரிப்பின் நிறம் - சிவப்பு!
சண்டைக்குப் போக தயாரா?
ஷ்ஷ்...!
ஏன் - என்ன விஷயம்? எதிரிக்கு நாம் பேசுவது கேட்க வாய்ப்பில்லையே!
-ஆனால் என் குதிரைக்கு கேட்டுத் தொலைத்து விடுமே!
ஆஹா... பயல் வசமாய் மாட்டிக்கிட்டான்!
சண்டைக்குப் போக வேண்டிய நேரமெல்லாம் இந்தக் கழுதை ஏதாவது கோல்மால் பண்ணி எனக்கு
'டேக்கா' கொடுத்து விடுறதே...!
ஒரு தடவை என்னடன்னு முயல் மாதிரி வேஷம் போட்டு தப்பிச் சுட்டான்னு பாருங்களேன்..!
ஆனல் இந்தத் தடவை பயலின் பாச்சா பலிக்காது...!
மாட்டிக்கினியா...?
புஸ்ஸ்ஸ்....



# க்ரைம் க்விஸ் (6) & (7) விடைகள்

"பிணம் காத்த புதையல்" இதழில் வந்திருந்த க்ரைம் க்விஸ் (6) & (7) க்கு ஏராளமான வாசகர்கள் வழக்கம் போல் பதில் எழுதியிருந்தனர். ஆனல் -இம்முறையோ இரு புதிர்களுக்குமே சரியான விடை எழுதியிருந்தது வெகு சிலரே...

க்ரைம் க்விஸ் ஆரம்பித்த நாள் முதல் - இத்தனை தவறான பதில்கள் வந்துள்ளது இந்தத் தடவையே...!

சரியான **விடைகளை** எழுதிய மிகச் சிலரில் குலுக்கல் மூலம் தேர்ந் தெடுக்கப்பட்ட அதிர்ஷ்டசாலிகள் :

1) **A. ஆனந்த்,**
138, முன்சீப் கோர்டு ரோடு,
திருமங்கலம் - 626 706.

2) **J. அன்புக்கரசு,**
C/o. T. பாஸ்கர்,
13/15, டேங்க் தெரு,
ஹோசூர் - 635 109.

3) **A. அருண் கார்த்திக்,**
C/o. P. சின்னத்தம்பி,
41, இராஜேந்திரா நகர்,
பாளையங்கோட்டை (P.O.)

-மூவருக்கும் ரூ. 75/- மதிப்புள்ள பரிசுகள் எங்கள் வாழ்த்துக்களுடன் அனுப்பப்பட்டுள்ளது!

---

இனி சரியான விடையைப் பார்ப்போமா?



## க்ரைம் க்விஸ் - 6

தொழிலதிபர் ஸ்மித்தை குத்திக் கொலை செய்தது வலக்கை பழக்கமுள்ள வாரிசு நம்பர் - 1 தான். சாட்சி சொல்லும் பெண் தன் கார் கண்ணாடியில் பார்த்தது ஒரு ஆசாமி இடது கையில் கத்தியுடன் குத்துவதை! கண்ணாடியில் பார்க்கும்போது

இடம் வலம் மாறித் தெரியுமல்லவா? மற்ற இரு வாரிசுகளும் இடக்கை பழக்கம் உள்ளவர்களாதலால் டேஞ்சர் வாரிசு நம்பர் 1 ஐ கைது செய்தார்!



## க்ரைம் க்விஸ் - 7



சில்வியா கொடுத்ததே அசல் உயில். ராபர்ட் கொடுத்த உயிலில் கவருக்கும் மடித்துப் போடப்பட்டதற்கான அடையாளமே தெரியவில்லை! ஆகையால் அது போலி!

---

**இம்மாத க்ரைம் க்விஸ் (11)**
**விடை அனுப்பக் கூப்பன் :**

**க்ரைம் க்விஸ் - (11)**
C/o. பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,
த. பெ. எண். 374,
சிகவாசி - 626 123.

விடையனுப்பக் கடைசித் தேதி : 15-7-94

---

லயன்
காமிக்ஸ்

## சந்தா விபரம்

***ஓராண்டுச் சந்தா - ரூ. 50/-***
***அரையாண்டுச் சந்தா - ரூ. 30/-***

அயல் நாட்டு வாசகர்கள் சந்தா தொகையோடு விமான அஞ்சல் கட்டணத்தினை சேர்த்து அனுப்பிட வேண்டும்.

D.D. அல்லது M.O. அனுப்ப வேண்டிய முகவரி :

***பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,***
தபால் பெட்டி எண் : 374,
சிவகாசி - 626 123.



லயன் காமிக்ஸின்
பத்தாவது
பிறந்த நாளைக்
கொண்டாடும் வகையில்
ஜீலை 1.ல்
வருகிறது
ஆண்டு மலர்!


அடுத்த வெளியீடு!
மந்திர மண்ணில் மாடஸ்டி!
லயன் காமிக்ஸ்
லயனின் 10-வது ஆண்டு மலர்!
மாடஸ்டியின் புத்தம் புதிய ஆக்ஷன் திரில்லர்!
ரூ. 5/=

| உங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள... | வாசக நண்பர்களே,<br>பொறுமையாக இந்தக் கேள்விகளுக்கு பதில் எழுதி அனுப்புங்களேன்! குலுக்கல் மூலம் 101 அதிர்ஷ்டசாலிகளைத் தேர்ந்தெடுக்கவிருக்குறோம்! அவர்களுக்கு ஒரு ''லயன் கீ செயின்'' பரிசு! |
|---|---|

1. உங்கள் பெயர் : ப.கண்ணன் வயது 19
2. உங்கள் குடும்பத்தில் மொத்தம் எத்தனை பேர்? : ஐந்து
3. உங்களைத் தவிர உங்கள் குடும்பத்தில் வேறு யாரேனும் இந்த புக்கை படிக்கிறார்களா? :
   - ☑ அப்பா
   - ☐ அம்மா
   - ☑ சகோதரிகள் / சகோதரர்கள்
4. இந்த இதழ் உங்கள் கைக்கு எப்படி வந்து சேர்ந்தது? :
   - ☐ நான் வாங்கினேன்
   - ☑ பெற்றோர் வாங்கிக் கொடுத்தது
   - ☐ இரவல்/லெண்டிங் லைப்ரரி
   - ☐ வேறு விதமாய் : ______
5. இந்த இதழைப் படித்து முடிக்க எத்தனை நேரம் ஆனது? : ______
6. ஒரு முறை படித்த இதழை சில நாட்கள் கழித்து திரும்பவும் படிப்பதுண்டா? : உண்டு
7. நீங்கள் டி.வி. விரும்பிப் பார்ப்பீர்களா? :
   - ☑ யெஸ்
   - ☐ நோ
8. உங்கள் வீட்டில் கேபிள் டி.வி. இருக்கிறதா? :
   - ☐ யெஸ்
   - ☑ நோ
9. டி.வி.யில் கார்டூன் பார்ப்பதுண்டா? :
   - ☑ யெஸ்
   - ☐ நோ
10. காமிக்ஸ் வாங்குவதற்கென்று பணம் ஒதுக்குவதுண்டா - அல்லது அப்படி Planning எதுவும் கிடையாதா? : ______
11. உங்கள் வீட்டிற்கு வந்து போகும் இதர பத்திரிக்கைகள்? : ______
12. இதற்கு முன்னர் நமது இதழில் வெளியாகும் போட்டிகளில் கலந்து கொண்டது உண்டா.. அல்லது வாசகர் கடிதம் போன்றவை எழுதியதுண்டா? ______
13. கடந்த நாலைந்து மாதத்தில் நமது இதழில் ஏதேனும் மாற்றம் தெரிகிறதா? :
   - ☐ யெஸ் ______
   - ☐ நோ ______



**வெகு விரைவில் எதிர்பாருங்கள்...!**

ஏஜெண்ட் **XIII** ன்

# இரத்தப் படலம்

## பாகம் V & VI

லயன் காமிக்ஸ்






**காமிக்ஸ்
வரலாற்றில்
சாதனை படைத்துவரும்
சித்திரத் தொடர்
இது!**

**உங்களை மெய்மறக்கச் செய்ய வருகின்றது!**

ஆகஸ்டில் வருகிறது!



ஜெஸ்ஸி ஜேம்ஸ்!
லக்கி லூக் சாகஸம்!
லயன் காமிக்ஸ்
Robin Hood
லயன் காமெடி ஸ்பெஷல்!
ரூ. 6/=
முழு வண்ணத்தில் முழுநீளக் கார்ட்டூன்!




# 1 - 100 லிஸ்ட்

வாசக நண்பர்களே,

நமது லயன் காமிக்ஸ் 1 - 100வது இதழ் வரை வரிசைப்படுத்தி கதைகளின் பெயர்களை எழுதியனுப்பச் சொல்லி போட்டி வைத்திருந்தோமல்லவா? கீழ்கண்ட வாசகர்கள் முழுமையான லிஸ்ட் அனுப்பியுள்ளனர்!

1. N. சந்திர சேகரன்,
   1, சின்னக் கண்மாய் தெரு,
   கோரிப்பாளையம், மதுரை - 2.
2. S. S. கார்த்திக்,
   ப்ளாட் நம்பர் 115,
   ராஜகோபாலபுரம் ஹவுசிங் யூனிட்,
   பெரியார் நகர், புதுக்கோட்டை - 3.
3. L. வெங்கடேஸ்வரன்,
   C. அய்யம்பாளையம் (P.O.)
   மண்ணச்ச நல்லூர் (Via)
4. E. S. B. சற்குணர்,
   3, 3rd க்ராஸ் தெரு,
   கிருஷ்ணா நகர், பம்மல்,
   சென்னை - 75.
5. R. ராஜா,
   20, கங்கை தெரு,
   வசந்த் நகர், பாண்டிச்சேரி - 3.
6. N. P. சிங்கார வேலு,
   122, மாரியம்மன் கோவில் தெரு,
   பெரமனூர், சேலம் - 7.
7. I. சிவக்குமார்,
   மீனாட்சிநகர்,
   வில்லாபுரம், மதுரை - 12.
8. Dr. D. பாலசுப்ரமணியன், M.B.B.S.,
   136-A, வடக்கு ரதவீதி,
   சிவகாசி - 626 123.
9. A. கலீல்
   1-94, அக்பர் தெரு,
   புருத்தோப்பு, கோட்டக்குப்பம்
   P.O. - 605 104.

இவர்கள் தவிர நிறைய வாசகர்கள் அரைகுறை லிஸ்ட் அனுப்பியுள்ளனர்! அவை ஏற்றுக் கொள்ளப்படவில்லை! சரியாக எழுதியனுப்பிய இந்த 9 வாசகர்களுக்கு நமது லயன் டி-ஷர்ட் பரிசாக அனுப்பப்படும்! 1 - 100 லிஸ்டை பார்ப்போமா?

1. கத்திமுனையில் மாடஸ்டி
2. மாடஸ்டி IN இஸ்தான்புல்
3. எத்தனுக்கு எத்தன்
4. Dr. டக்கர்
5. இரும்பு மனிதன்
6. கபாலர் கழகம்
7. பாதாளப் போராட்டம்
8. கொலைப்படை
9. பயங்கர நகரம்
10. கடத்தல் குமிழிகள்
11. மரணக்கோட்டை
12. பழிவாங்கும் பொம்மை
13. சதிவலை (கோடை ஸ்பெஷல்)
14. காணாமல் போன கடல்
15. சைத்தான் விஞ்ஞானி
16. உலகப் போரில் ஆர்ச்சி
17. யார் அந்த மினி ஸ்பைடர்?
18. இஸ்தான்புல் நாடகம்
19. தலை வாங்கி குரங்கு
20. ஆப்பிரிக்க சதி
21. மனித எரிமலை
22. சதுரங்க வெறியன்
23. மாஸ்கோவில் மாஸ்டர்
24. தங்க வேட்டை
25. கோடை மலர் - 86
26. அதிரடி வீரர் ஹெர்குலஸ்
27. பளிங்குச்சிலை மர்மம்
28. மர்ம எதிரி
29. நீதிக்காவலன் ஸ்பைடர்
30. யார் அந்த ஜூனியர் ஆர்ச்சி?

31. தீபாவளி மலர் - 86
32. மீண்டும் ஹிட்லர்
33. பழிவாங்கும் பாவை
34. புரட்சித்தலைவன் ஆர்ச்சி
35. மரண மாஸ்டர்
36. கோடைமலர் - 87
37. காணாமல் போன கோடீஸ்வரர்
38. கல் நெஞ்சன்
39. அதிரடிப்படை
40. பயங்கர நாடகம்
41. கராத்தே டாக்டர்
42. லயன் சூப்பர் ஸ்பெஷல்
(தீபாவளி மலர்)
43. கடத்தல் வலை
44. டேஞ்சர் டயபாலிக்
45. ஆர்ச்சிக்கோர் ஆர்ச்சி
46. இராட்சஸ குள்ளன்
47. மரணப்பணி
48. சூப்பர் ஸ்டார் ஸ்பைடர்
49. கொலைப்பசி
50. டிராகன் நகரம்
51. மிஸ்டர் ஜெட்
52. கானகத்தில் கண்ணாமூச்சி
53. சாகஸத்தலைவி
54. கற்கால வேட்டை
55. சிறுபிள்ளை விளையாட்டு
56. இரத்த முத்திரை
57. அதிரடி ஆர்ச்சி
58. வாரிசு வேட்டை
59. மிஸ்டர் மர்மம்
60. வைக்கிங் தீவு மர்மம்
61. மந்திர ராணி
62. நடுக்கடலில் அடிமைகள்
63. மரண ராகம்
64. அதிரடிக் கணவாய்
65. தங்க நகரம்
66. மர்மக்கோவில்
67. எமனுக்கு எமன்
68. திக்குதெரியாத தீவில்
69. புதையலைத் தேடி
70. எமனுடன் ஒரு யுத்தம்
71. கானகத்தில் ஒரு கைதி
72. மீண்டும் ஸ்பைடர்
73. சிலந்தி வலையில் காரிகன்
74. மரணத்தின் நிறம் பச்சை
75. மரணத்தின் நிழலில்
76. அதிசயத்தீவில் ஆர்ச்சி
77. மர்ம முகமூடி
78. பொக்கிஷம் தேடிய பிசாசு
79. Operation அலாவுதீன்
80. ஒரு பனிமலை பயங்கரம்
81. பழிவாங்கும் புயல்
82. மரண மாளிகை
83. லயன் ஹாலிடே சூப்பர் ஸ்பெஷல்
84. மின்னலோடு ஒரு மோதல்
85. இரத்தமில்லா யுத்தம்
86. கழுகு வேட்டை
87. ஆர்ச்சி IN Paris
88. பாலைவன சொர்க்கம்
89. இரத்த வெறியர்கள்
90. ஏரியில் ஒரு எரிமலை
91. கானகக் கோட்டை
92. ராக்கெட் ரகசியம்
93. பலிகேட்ட புதையல்
94. எதிரிக்கு எதிரி
95. முகமில்லா மாயாவி
96. வேங்கை வேட்டை
97. பிணம் காத்த புதையல்
98. லயன் லயன் ஸ்பெஷல் (இலவச இணைப்பு)
99. பழி வாங்கும் பொம்மை (மறுபதிப்பு)
100. சென்சுவரி ஸ்பெஷல்



ஸ்ரீலங்கா வாசகர்கள் மட்டுமே பங்கேற்கக் கூடிய போட்டி இது!




டேஞ்சருக்கு அந்த அறையில் திருடன் பதுங்கியிருப்பது எப்படித் தெரிந்தது? கண்டு பிடித்து எழுதி



பரட்டைத் தலை ராஜா!
யப்பா! வெயில் ஓவர் என் அருமை பிரஜைகளே உங்கள் மன்னருக்கு ஒன்றென்றால் நீங்கள் தாங்குவீர்களா? அதனால் ஓடிப்போய் வெயிலுக்கு இதமாக மன்னருக்கு இளநீர் பறித்து வாருங்கள் ஹி.. ஹி..
அட பேமானி
ஓடுங்க! தடி மாடுங்களா! இன்னும் சிறிது நேரத்துல கருவாடா ஆயிடுவேன் போல இருக்கு
கதை:வசனம்:சித்திரம்:S.ஜெய்ஷங்கர், 4/137, T.N.H.B, திருவண்ணாமலை-606601.
பரிசு ரூ.101/=
கடைசில என் நிலமை இப்படியா ஆவரது!!
அந்த பேமானி மட்டும் வசமா என்கிட்ட மாட்டட்டும் கிழிச்சி நார் நாராக்கிர்றேன்
அடா! அடா என்மேல் என் பிரஜைகளுக்கு எவ்வளவு அக்கறை


மொடுக்! மொடுக்!
ம்ம்!! சூப்பர்
சூப்பர் தூள்
ஐ உள்ள தேங்கா இருக்கு! ஒரு புடி புடிக்கலாம்!!
ஙே! கையி வர மாட்டேங்குது!?
ஐயோ யாராவது காப்பாத்துங்க
அடேய்!! பேமானி என் பொழப்பு உனக்கு சிரிப்பா? போச்சா???



ஆஆஆஆஆ யம்மாடிடிடிடிடி
நாங்க காப்பாத்துரோம் பரட்ட!
ரெடியா? பரட்ட
ஒக்கே
எப்படி ஓட ஓட வெரட்டுன இப்பபார்- அதுக்கு வட்டி! அசல் இரண்டும்!!!
ரெடி! ஒன்! டு! த்ரீரீரீ
அம்மாடிடிடி
தும்
பரட்டை. அம்பேல்!!!
முற்றும்.

# புக் மார்கெட்

## விற்பனைக்கு

லயன்

1. பாதாளப் போராட்டம்
2. அதிரடிப்படை
3. சாகஸத் தலைவி
4. சிறுபிள்ளை விளையாட்டு

திகில்

5. பிசாசுக் குரங்கு
6. சைத்தான் சாம்ராஜ்யம்

## தேவை

திகில்

1. பனி மண்டலக் கோட்டை
2. பனிமலை பூதம்
3. இரத்தப்படலம் I & II

லயன்

4. ஆப்பிரிக்க சதி
5. சதுரங்க வெறியன்

தொடர்பு கொள்க :

**S. ஜெய்ஷங்கர்**

L/137, T.N.H.B. திருவண்ணாமலை.

## விற்பனைக்கு

1. பாதாளப் போராட்டம்
2. சைத்தான் விஞ்ஞானி
3. டாக்டர் டக்கர்
4. கடத்தல் குமிழிகள்
5. சதுரங்க வெறியன்
6. கொலைப்படை
7. மிஸ்டர் ஜெட்
8. இரும்பு மனிதன் ஆர்ச்சி

## தேவை

1. டிராகன் நகரம்
2. மந்திர ராணி
3. சாகஸத் தலைவி
4. அதிசயத் தீவில் ஆர்ச்சி
5. எமனுடன் ஒரு யுத்தம்
6. மரணப்பணி
7. எமனுக்கு எமன்
8. ஆர்ச்சிக்கோர் ஆர்ச்சி

விற்க - வாங்க தொடர்பு கொள்க :

**L. S. சங்கர்,**

81, வடக்குத்தெரு, தாராசும் - 612 702.




விடையைக் கண்டுபிடித்து எழுதுங்கள்!